செய்தி வெளியீடு எண்:1216 நாள்:26.11.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, அவர்கள் தலைமையில் இன்று (26.11.2021), சென்னை நந்தனத்திலுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கூட்டரங்கில் வணிகவரி இணை ஆணையர்களின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட உரையின் போது மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் வணிகவரித்துறை மறுகட்டமைப்பு செய்யப்பட்டு கூடுதலான மனித வளங்களை களப்பணிக்கு அளிக்கவும் புலனாய்வு மற்றும் தணிக்கையை வலுவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி வணிகவரித்துறையில் சார்நிலையில் உள்ள 1000 பணியிடங்களின் பணிநிலையினை தரம் உயர்த்த கொள்கை அளவில் அனுமதிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

வணிகவரித்துறையில் தற்போது 12 நிர்வாகக் கோட்டங்கள் இயங்கி வருகின்றன. வணிகவரித்துறையை மறுகட்டமைப்பு செய்யும் ஓர் அங்கமாக 7 புதிய வணிகவரி நிர்வாகக் கோட்டங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும் வணிகவரித்துறையில் தற்போது 9 நுண்ணறிவு கோட்டங்கள் இயங்கி வருகின்றன. புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகளை மேலும் வலுவாக்கவும் தணிக்கைகளை அதிகப்படுத்தவும் 6 புதிய நுண்ணறிவுக் கோட்டங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது அதற்குரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் தமிழ்நாட்டில் நடப்பாண்டின் அக்டோபர் 2021 மாதம் முடிய மொத்தம் (இழப்பீட்டு தொகையுடன்) ரூ. 56,295/- கோடி வசூல் ஆகி உள்ளது. இது முந்தைய ஆண்டு அக்டோபர் 2020 வரை ஒப்பிடுகையில் 26

சதவிகிதமும், அக்டோபர் 2019 முடிய ஒப்பிடுகையில் 3 சதவிகிதமும் கூடுதல் வளர்ச்சி விகிதமாகும்.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் வரிஏய்ப்பு மற்றும் வணிகர்களின் குறைகளைக் களைவதற்காக கடந்த 01.07.2021 முதல் புகார் பிரிவு தொடங்கப்பட்டது. இதுவரை 333 புகார்கள் மின்னஞ்சல் மூலமும் 426 புகார்கள் தொலைபேசி மூலமும் பெறப்பட்டு 638 புகார் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டது. மீதமுள்ள புகார்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வணிகவரித்துறையில் கடந்த ஆகஸ்ட் 2021, செப்டம்பர் 2021 மற்றும் அக்டோபர் 2021 ஆகிய மாதங்களில் நுண்ணறிவுப் பிரிவு சுற்றும் படை அலுவலர்களால் 1,74,199 வாகனங்கள் மற்றும் 2,21,543 மின் வழிச்சீட்டுகள் தணிக்கை செய்யப்பட்டு 3,256 குற்றங்கள் கண்டறியப்பட்டன. அதன்மீது வரி மற்றும் அபராதத் தொகையாக ரூ. 17.64 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவித்ததன்படி வரி ஏய்ப்பினை தடுக்கும் பணியினை ஊக்குவிக்கும் பொருட்டு மாநிலம் முழுவதும் இருந்த 50 சுற்றும் படை குழுக்கள் தற்போது 100 சுற்றும்படை குழுக்களாக உயர்த்தப்பட உள்ளது. மேலும் 100 புதிய வாகனங்களும் வழங்கப்பட உள்ளன.

நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களால் மேற்கண்ட காலக்கட்டத்தில் 465 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ரூ.25.99 கோடி ரூபாய் மற்றும் அபராதத் தொகையாக வசூல் செய்யப்பட்டது. மேலும் ஆய்வின் மூலம் போலி வணிகர்கள் கண்டறியப்பட்டு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் வணிகர் நல வாரியம் சிறப்பாக செயல்படவும், நலவாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை

அதிகப்படுத்தவும், இணைய வழி சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், சிறு வணிகர்கள் நலவாரியத்தில் செப்டம்பர் 2021 வரை சேர்வதற்கான கட்டணத்திலிருந்து விலக்களித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணை மார்ச் 2022 வரை நீட்டிக்கப்படும். இச்சலுகை காரணமாக 12,344 உறுப்பினர்களாக இருந்த நலவாரியம் கடந்த 3 மாதங்களில் மட்டும் புதிய உறுப்பினர்களின் சேர்க்கையையொட்டி 40,442 உறுப்பினர்களாக உயர்ந்துள்ளது. இதில் இலவசச் சேர்க்கையின் மூலமாக 38,135 உறுப்பினர்களும் சேர்க்கை கட்டணம் செலுத்தி 2,307 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். மேலும், அவர்களுள் 8,544 உறுப்பினர்கள் தாங்களாகவே இணையதளம் மூலமாகவும், 31,898 உறுப்பினர்கள் இணை ஆணையர் (வ.வ.) மூலமாக சேர்ந்துள்ளனர். ஏற்கனவே, வழங்கப்பட்டு வந்த உதவித்தொகையுடன் திருமண முன்பணம் ரூ.10,000, விபத்து கால இழப்பீட்டு தொகையாக ரூ.25,000 வழங்க அரசாணை வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்து மரணம் அடைந்த இரு வணிகர்களின் குடும்பத்திற்கு குடும்ப நல உதவி திட்டத்தின் கீழ் தலா ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் வணிகவரித்துறையில் 25 வருடங்கள் விபத்துகள் இன்றி பணி செய்த இரு ஓட்டுநர்களுக்குத் தங்கப் பதக்கத்துடன் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலர், திருமதி. பா. ஜோதி நிர்மலா சாமி, இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**